**O.S.174 of 2021**

Date : 26.11.2025

வா.சா.1 : லெட்சுமணன்

வா.சா. 1மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

என்னுடைய பூர்வீக ஊர் மறுகால் குறிச்சி ஆகும். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்துவருகிறேன். பிரதிவாதியின் பூர்வீக ஊர் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன ஊர் என்றால் கூடன் குளம் ஆகும். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் ஆசிரியர் வேலை பார்ப்பதாக சொன்னார். பிரதிவாதிகளின் குடும்ப உறுப்பினர்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் சம்பள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. என்னிடம் பான் கார்டு உள்ளது. வழக்கு கசோலை தரப்பட்டதாக சொல்லக்கூடிய காலக்கட்டத்தில் நான் வருமான வரி செலுத்தினேனா என்றால் செலுத்தவில்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.